*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **20 பிப்ரவரி, 2025**

## பத்திரிகை செய்தி

அருணாச்சல பிரதேசம் மற்றும் மிசோரம் மாநிலங்களின் உதய நாள் கொண்டாட்டம் ஆளுநர் மாளிகையில் இன்று(20-02-2025) நடைபெற்றது.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு. K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக நிகழ்ச்சியில் பங்கேற்றார். புதுச்சேரியில் உள்ள பல்வேறு கல்வி நிலையங்களில் பயிலும் அருணாச்சல பிரதேசம் மற்றும் மிசோரம் மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள் மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் இரண்டு மாநிலங்களின் கலை கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. துணைநிலை ஆளுநரின் செயலர் திரு மணிகண்டன், காவல்துறை துணை தலைமை அதிகாரி திரு சத்திய சுந்தரம் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் உரையின் சுருக்கம்.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாநில மக்களிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்தவே இந்த நிகழ்ச்சி மத்திய அரசு முன்வைத்து இருக்கிறது. நம்முடைய பன்முக கலாச்சாரத்தை, பாரம்பரியத்தை நாம் கொண்டாடி வருகிறோம்.

மத்திய அரசு எடுத்து வரும முயற்சியால் வடகிழக்கு மாநிலங்களில் தற்போது நல்ல உள்கட்டமைப்பு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

புதுச்சேரியின் வளர்ச்சிக்கு நீங்கள் பங்காற்றி வருகிறீர்கள். வடகிழக்கு மாநில மக்களின் நலனைப் பாதுகாக்க புதுச்சேரி அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.